[1979 மார்ச் 3

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தற்போது கிராம மருத்துவத்திற்கான பயிற்சி நடைமுறையில் நீண்ட காலமாக இல்லை. ஆகவே, அப்படி பதிவு செய்கின்ற ஒரு பிரச்சனை இல்லை. சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி போன்ற மருத்துவத்திலே குழந்தைகளுக்கான விசேஷ பயிற்சி பெறும் பிரிவும் பயிலுவதற்கு வழிவகைச் செய்யபட்டிருக்கிறது. இன்னும் எப்படிச் செய்யலாம் என்று மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் எடுத்துக்கூறினால் அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது குழந்தைகள் ஆண்டு என்பதை நினைவுபடுத்தினார்கள். இது குழந்தைகள் ஆண்டு என்பதால் குழந்தைகள் கட்டுப்பாட்டை நிறுத்தி வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, குழந்தைகள் சீரோடும் சிறப்போடும் வளர்வதோடு அவர்கள் திடகாத்திரம் உடையவர்களாகவும் வளரவேண்டும் என்பதுதான் குழந்தைகள் ஆண்டைக் கொண்டாடுவதன் நோக்கமாகும். குழந்தைகள் குறைவாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்வது பெற்ற குழந்தைகள் நல்ல முறையில் பேணிக் காக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே குழந்தைகள் நலம் பேணும் இந்தக் குழந்தைகள் ஆண்டில் குடும்பநலத்திட்டம் செயல்படுவது பற்றி தவறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, சித்த வைத்தியத்திற்குரிய பல நூல்கள் திரு. சி. டி. நாயுடு அவர்களிடமும், டாக்டர் ஆனந்தகுமார் அவர்களிடமும் இருந்ததாகக் கேள்விப்பட்டேன். அவற்றை அரசாங்கம் பெற்று, பாதுகாத்து, பயன்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாங்க மருத்துவர்கள் தனியாகத் தொழில் நடத்துதல்

*வினா எண். 215— திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
டாக்டர் கே. சமரசம்
திரு. கு. ரமணி
திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்
திரு. கா. அப்புனு கவுண்டர்

1979 மார்ச் 3]

திரு. டி. எம். தைலப்பன்
திரு. என். கிட்டப்பா
திரு. மெ. ஆண்டி அம்பலம்: } மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்க டாக்டர்கள் தனியாக தொழில் நடத்துவதை (Private practice) தடை செய்யும் நோக்கம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) அரசாங்க மருத்துவ அதிகாரிகள் தனியாகத் தொழில் செய்தலை ரத்து செய்யலாம் என்று நிர்வாக சீர்திருத்தக் குழுவும் மேல்மட்டக் குழுவும் பரிந்துரை செய்தன. இப்பிரச்சினை அமைச்சரவையில் பரிசிலிக்கப்பட்டு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

அலகாபாத் உயர்நீதிமன்றம் அரசாங்க மருத்துவர்கள் தனியாக தொழில் செய்வதை தடைசெய்த உத்தரவுக்கு சாதகமாக தீர்ப்பு அளித்தது. அதன்பேரில் பாதிக்கப்பட்ட அரசாங்க மருத்துவர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்துள்ளனர். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டபின் இப்பிரச்சினை மேலும் ஆராயப்படும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, ஆடுகின்ற குடி ஆடிக் கொண்டிருக்கட்டும், ஆண்ட குடி கெட்டுக் கொண்டிருக்கட்டும் என்பது முதுமொழி. அதுபோன்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் வெளியிலே தொழில் நடத்தி முதலீட்டுகின்ற வகையிலே தவறுகள் பல நடந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள் தான் தன்னுடைய பதிலிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்களே, ஆகவே அதையே திரும்பத் திரும்பக் கேட்காமல் வேறு ஏதாவது தகவல் வேண்டுமானால் கேளுங்கள்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்த விஷயம் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்ற காரணத்தால் அந்தத் தீர்ப்பு வந்தவுடன் பரிசிலிக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே இதற்காக சட்டத்திலேயே திருத்தம் செய்வதற்கு இந்த அமைச்சரவை முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1979 மார்ச் 8

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதைக் குறிப்பிட்டேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இதுபற்றி உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பு வர இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது டாக்டர்கள் பல மணி நேரம் வெளியிலே உள்ள மருத்துவ மனைகளிலே போய்ச் செயல்படு கிறார்கள். ஆகையால் அரசாங்க மருத்துவ மனைகளிலே கிடைக்க வேண்டிய சேவை கிடைக்காமல் இருக்கின்றது. ஆகவே அதைக் கிடைக்கச் செய்கின்ற அளவுக்கு, அந்த டாக்டர்களைத் தூண்டுகிற அளவுக்கு, அதாவது ஒரு இன்ட்யூஸ் மென்டாக அவர்களுக்கு டியூட்டி அலவன்ஸ் என்று கொடுத்து அவர்கள் வெளி மருத்துவ மனைகளிலே செயல்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதற்கான அளவிலேதான் இந்த அரசு உச்ச நீதிமன்றத்தினு டைய தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஸ்டான்லி மருத்துவ மனையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகிறபோது வெளியிலே மருத்துவமனை வைத்திருக்கின்ற டாக்டர்கள் மருந்துகளைத் திருடிச்செல்வதாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, அவர் கேள்வியைக் கேட்கின்றபோதே சம்பந்தம் இல்லை என்று கூறி உட்கார வைத்துவிடுகிறீர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். தலைவர் செய்ய வேண்டிய வேலையை திரு துரைமுருகன் அவர்கள் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் எனக்கு ஒத்துழைப்பு தரவேண்டும். எந்த உறுப்பினர் பற்றியதாக இருந்தாலும் நீங்கள் எழுந்து எழுந்து பேசுவது சரியல்ல. அப்படி நீங்கள் பேசுவது எந்த முறையின்கீழ் வருகிறது என்பது தெரியவில்லை. முதல் வரிசையிலே இருக்கின்ற தலைவர்களும் இதைப்பற்றி ஏன் என்று கேட்டு ஒத்துழைப்பதும் இல்லை. ஆகவே நீங்கள் உட்காருங்கள். அவர் கேட்ட கேள்விக்குத்தான் நான் சொன்னேன்.

1979 மார்ச் 3]

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, நியாயத்திற்கு முன் வரிசை என்றும் பின்வரிசை என்றும் கிடையாது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு கொஞ்சம் ஒத்துழையுங்கள். உட்காருங்கள். அடுத்த உறுப்பினரைக் கூப்பிடப்போகிறேன்.

[முற்பகல் 11-00]

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர். கேள்வி நேரம் முடிந்துவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் ஒரு செகன்ட் இருக்கிறது. அவையின் அனுமதியுடன் வினா நேரத்தை இன்னும் சிறிது நேரம் நீட்டிக்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : ஹானரரி சர்ஜன்ஸ், கௌரவ மருத்துவர்கள் நோயாளிகள் அவர்கள் தனிமருத்துவ மனைகளுக்கு வரும்போது அரசாங்க மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகளைப் பயன்படுத்துவதால், அரசாங்க மருத்துவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று கருதப்படுவதால் அதைத் தவிர்க்க ஆனரரி சர்ஜன்ஸ் நியமிக்கப்படுவதை நிறுத்துவதற்கு அரசு ஆலோசிக்குமா? அதைப்பற்றி அண்மையில்கூட சுகாதார அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருப்பது உண்மையா? உண்மையானால் அதை எப்போது செயல்படுத்தப்போகிறார்கள்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மூலக் கேள்வி அரசாங்க டாக்டர்களைப் பற்றியது. கௌரவ மருத்துவர்களைப் பற்றியதல்ல. ஆகவே தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : அரசாங்க மருத்துவ அதிகாரிகள் தனியாக மருத்துவம் செய்வதால் அரசாங்க மருந்துகளை எடுத்து ட்ரீட்மென்ட் செய்வதாக பொதுமக்கள் சொல்லுகிறார்கள். மேலும் தனியாக சிகிச்சை செய்வதால் அதிகப்படியாக சம்பாதிக்க நினைக்கிறார்கள். ஆகவே, அதை நிறுத்தி அரசாங்கம் அவர்களுக்கு கூடுதல் சம்பளம் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அப்படி மருத்துவர்கள் பயன்படுத்துவதைத் தடுக்க நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு வருகின்றன. தனியாக வைத்தியம் பார்ப்பதுபற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதற்காக உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

சௌடாம்பிகை நெசவாளர் கூட்டுறவுச்சங்கம்.

*வினா எண் 217—திரு ஆ. நடராசன்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம் வெள்ளலூர் ஸ்ரீசௌடாம்பிகை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச்சங்கம் லாபகரமாக நடைபெறுகிறதா ?

(ஆ) அங்கு தற்போது தேங்கியுள்ள சரக்கு எவ்வளவு ?

(இ) இதனால் நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனரா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :

(அ) ஆம்.

(ஆ) இப்போது இருப்பில் உள்ள சரக்குகளின் விலை ரூ. 36,000. இது மாத உற்பத்தியில் பாதி அளவேயாகும்.

(இ) இதனால் நெசவாளர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை.

திரு. ஆ. நடராசன் : சென்ற ஆண்டு இந்தச் சங்கத்திற்கு எவ்வளவு ரூபாய லாபம் வந்தது ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : சென்ற ஆண்டு ஆரம்ப நிலையில் இந்தச் சங்கத்தில் துணித் தேக்கம் அதிகம் இருந்ததால் ஓரளவு நஷ்டத்தில் இயங்கியது. ஆனால் சென்ற ஆண்டு அறிவித்த 20% ரிபேட்டினால் தேங்கிக் கிடந்த துணிகள் அனைத்தும் விற்பனை செய்ததாலும், காசுக் கடன் அதிகரித்திருப்பதாலும் தற்போது அச்சங்கம் லாபத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

வட ஆற்காடு மாவட்டத்தில் புதிய பேருந்து வழித்தடங்கள்.

வினா எண். 501—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கயவசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974, 1975, 1976 ஆகிய வருடங்களில் வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் எந்தெந்த புதிய வழித் தடங்களில் பேருந்துகள் விடப்பட்டன?

(ஆ) அவற்றுள் எத்தனை வழித்தடங்கள் தனியார்த் துறை, போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு கொடுக்கப்பட்டன ?

(இ) இன்னும், எந்தெந்த வழித்தடங்களில் பேருந்துகள் விடுவதற்கான கோரிக்கை மனுக்கள் நிலுவையிலுள்ளன?